ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**விசுவாவசு ஆண்டு பங்குனி திங்கள் பௌர்ணமி ஆசி விளக்கம்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்க நூல்**

01.04.2026

1. அருள் காட்டும் அப்பனவர் அடிகள் போற்றி
அறிவிப்பேன் அரங்கன்யான் அருளாசி
வரமாக ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும்
வல்லமைமிக்க ஓங்காரக்குடிலின் அன்னதானத்திற்கும்

2. தொண்டர் பெருமக்கட்கும் அரங்கமகான் யானும்
அறிவுரை ஆசியாக அருளாசி தன்னை
விசுவாவசு ஆண்டு பங்குனி திங்களுக்கான
பௌர்ணமி ஆசி விளக்கமாக அருள்வேன்

3. அப்பனே ஓங்காரக்குடில் பங்குனி பௌர்ணமி
பங்குனி உத்திரவிழா மிகச்சிறப்பாகவே
சுப்ரமணியர் தலைமையிலும் அரங்கன்
என்னோடு ஞானியர் படைகளெல்லாம் சூழ

4. ஓங்காரக்குடிலின் விழா மிகச்சிறப்பாக
நடந்து கொண்டிருக்கின்றது
இவ்விழாவில் ஞானியர்களும் சூட்சுமமாய்
மானுடரருள் மானுடராக வந்து கலந்து

5. ஓங்காரக்குடிலின் அருளமுதை
அருட்பிரசாதத்தை உண்டு சென்றுள்ளனர்
அப்பனே குடிலின் அருளமுது சிறப்பு
குடிலின் பூஜை வழிபாடுகளும் சிறப்பு

6. உயர்வாக நிர்வகிக்கின்ற
நிர்வாகத்தின் பாங்கும் சிறப்பு
என் தொண்டர் பெருமக்களெல்லாம்
முழு சரணாகதி கொண்டு

7. அற்புதமாய் தொண்டாற்றி வர
அவர்களுடைய தொண்டும் சிறப்பு
அன்னதனால் ஓங்காரக்குடிலின்
தர்மம் தடைபடா வண்ணம்

8. அரங்கன் யான் பாதுகாத்து வழிநடத்துவேன்
இந்த அன்னதானத்திற்கு உண்டான

பொருளாதார பலமும் தொண்டர் படை பலமும்
அன்பர்களுடைய உழைப்பும் சரணாகதியும்

9. எவ்வித குறையுமின்றி சிறப்பாக அமைய
அரங்கன் யான் அருள் செய்வேன்
அன்னதனால் இந்தவித நன்னாளில்
வந்து கலந்து கொண்ட உலக மக்கள் அனைவருக்கும்

10. அரங்கன் யான் சூட்சுமமாய்
ஆசியும் அனுகூலமும் வரமும்
ஆக்கமும் ஆயுள் ஆரோக்கியம்
ஐஸ்வர்யமும் அனைத்தும் வரமாக வழங்கியுள்ளேன்

11. உள்ளபடி இந்தவித பூஜை விழாவில்
சரணாகதி கொண்டு குடிலின்
தர்மத்தில் பொருளுதவியும்
குடில் தொண்டில் இனிதே கலந்து

12. தொண்டும் செய்த அன்பர்கட்கு
அரங்கன் யான் இன்று சூட்சுமமாய்
வரம் பல தந்துள்ளேன்
உள்ளபடி என் அனுகூலம்

13. பரிபூரணமாய் உண்டு உண்டு
சத்தியம்பட குடிலின் தர்மம்
உலகையே மாற்றும் மகா
சக்தியாக விளங்கி வருவதாலே

14. உலகமெங்கும் கிளைகள் துவங்கி
ஓங்காரக்குடிலின் தர்மம்
அளவிலா வண்ணம் பெருகும்
அதற்கு அரங்கன் யான் வழிகாட்டுவேன்

15. உலகளாவிய வண்ணம் மக்களெல்லாம்
அரங்கன் என் கொள்கை ஏற்று வழிநடந்து
சன்மார்க்கமே உலகை ஆளுகின்ற வண்ணம்
அற்புதங்களும் நடத்துவேன் அரங்கன் யான்

16. இந்தவித நன்னாளில் என் அன்பர்கள்
அனைவருக்கும் சூட்சும ஆசியும்
பலமும் தந்துள்ளேன் உள்ளபடி
என் அனுகூலம் பெற்ற

17. என் சீடனாம் ராம்குமார் கரம்பட
இன்று அளவிலா வண்ணம்
சக்தியாய் தீட்சையும் ஆசியும்
அனுகூலமும் வரும் அன்பர்

18. அனைவருக்கும் தந்துள்ளேன்
உள்ளபடி மகனவனுக்கும்
ஆரோக்கியம் ஆயுள் பலம்
அவன் குடிக்கும் அவன் சார்ந்த

19. உறவுகள் அனைவருக்கும்
அரங்கன் யான் ஆக்கமாகவும்
அவர்களுக்குள்ளே சக்தியாகவும் இருந்து
இயங்கி அற்புதம் நடத்துகின்றேன்

அரங்கன் யான் அருளிய ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி